# அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இருக்கண்குடி.

## சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.

(ந.க.எண். 87/2021-1 அ6 நாள் : 24.06.2022)

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

இத்திருக்கோயிலில் கீழ்கண்ட வேலைக்கு தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறையில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் 13.07.2022 அன்று பிற்பகல் 3.00 மணி வரை திருக்கோயில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 13.07.2022 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆஜராகியிருக்கும் டெண்டர்தாரர்கள் முன்னிலையில் திருக்கோயில் அலுவலகத்தில் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் எதிரே குறிப்பிட்டுள்ள விலையில் திருக்கோயில் அலுவலகத்தில் 12.07.2022 அன்று மாலை 5.30 வரை பெற்றுக் கொள்ளலாம்.

| வேலையின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | முன் வைப்புத் தொகை ரூ. | வேலையை முடிக்கும் காலம் | ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை ரூ. |
|---|---|---|---|---|
| திருக்கோயிலில் வடமேற்குப் பகுதியில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு மேல்நிலைத் தொட்டி கட்டும் பணி | 40.70 லட்சம் | 40,700/- | 4 மாதங்கள் | 10,100/- |

### ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. திருக்கோயில்களில் கட்டுமான வேலைகளை ஏற்கனவே செய்ததற்கான முன் அனுபவம் இருக்க வேண்டும். மேலும் ஒப்பந்தகாரருக்கான பதிவு 2021-2022ம் ஆண்டிற்கு புதுப்பிக்கப்பட்டதற்கான சான்றிதழ், வருமான வரிச் சான்றிதழ், GST எண்ணுடன் சான்றிதழ், ஆதார் அட்டை, பான்(PAN)கார்டு ஆகியவைகளின் நகல் இணைக்கப்பட வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களுக்குரிய தொகையினையும், முன்வைப்புத் தொகையினையும் Assistant Commissioner / Executive Officer, Arulmigu Mariamman Thirukkoil, Irukkangudi என்ற பெயரில் பெறப்பட்ட வரைவோலையாக மட்டும் செலுத்த வேண்டும்.
3. ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில் உதவி ஆணையர்/ செயல் அலுவலர் பெயருக்கு விலாசமிட்டு உரிய நேரத்தில் அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும்.
4. ஒப்பந்தப்புள்ளியில் அடித்தல், திருத்தல், ஏதாவது இருந்தால் அவைகளில் ஒப்பந்தக்காரர் சிறு கையொப்பம் செய்திருக்க வேண்டும்.
5. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் வேலையின் தன்மையையும், வேலைக்கான இடத்தையும் நன்கு அறிந்தவராகவே கருதப்படுவார்.
6. ஒப்பந்தப்புள்ளிகளை காரணம் சொல்லாமல் நிராகரிக்க இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் உண்டு.

7. ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் இந்து சமய அறநிலையத் துறை அதிகாரத்திற்கு உட்பட்டது.
8. ஒப்புதல் பெற்ற ஒப்பந்தக்காரர் ஒப்புதல் பெற்ற தேதியிலிருந்து ஒருவார காலத்திற்குள் முன்வைப்புத் தொகை உட்பட மொத்தம் 2% பாதுகாப்புத் தொகையாக (Security Deposit) அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.
9. தகுந்த ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுத்த பின்னர்தான் வேலை செய்ய ஒப்பந்தகாரர் அனுமதிக்கப்படுவார்.
10. ஒப்பந்தக்காரர் எக்காரணத்தை முன்னிட்டும் உப ஒப்பந்தம் ஏற்படுத்துதல் கூடாது.
11. வேலைகள் எம்.டி.எஸ்.எஸ். மற்றும் டி.என்.பி.ப்பி. தரத்தில் செய்யப்பட வேண்டும்.
12. ஒப்பந்தக்காரர் குறிப்பிட்ட காலத்திற்குள் வேலையை செய்து முடிக்க வேண்டும்.இல்லையெனில் அதற்கான அபராதம் விதிக்கவும் , வேலையை ரத்து செய்யவும், பாக்கி வேலையை திருக்கோயில் மூலம் பூர்த்தி செய்து அதனால் ஏற்படும் செலவு, நஷ்டம் இவைகளை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வசூல் செய்யப்படும்.
13. ஆதார் அட்டை, PAN CARD, மற்றும் TIN உள்ள ஒப்பந்தக்காரருக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளி வழங்கப்படும்.
14. இவ்வறிப்பில் வெளியிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் இப்பணிக்காக பின்னர் மேற்கொள்ளப்படவிருக்கும் ஒப்பந்த நிபந்தனைகளின் ஒரு பகுதியாகும்.
15. இத்திருக்கோயிலில் ஏற்கனவே வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் எடுத்து காலதாமதமாக முடித்து அபராதம் செலுத்தியவர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.
16. வேலையினை அறநிலையத்துறை சட்ட திட்டங்களுக்குட்பட்டு செய்ய வேண்டும்.
17. மேற்படி வேலையில் பயன்படுத்தப்படும் பொருட்கள் அனைத்தும் ISIக்கு நிகரான தரமான பொருட்களாக இருக்க வேண்டும்.
18. மேற்படி வேலைக்கு திருக்கோயில் மின் இணைப்பிலிருந்து மின்சாரம் பயன்படுத்தும் பட்சத்தில் உரிய கட்டணத்தினை ஒப்பந்தக்காரர் செலுத்த வேண்டும்.

உதவி ஆணையர்/செயல் அலுவலர்.

பரம்பரை அறங்காவலர் குழுத் தலைவர்.
மற்றும் பரம்பரை அறங்காவலர்கள்

இருக்கண்குடி.
24.06.2022